# நமக்கு இன்றைய தேவை என்னவெனில் மனிதர்களே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து


நமக்கு இன்றைய
தேவை
என்னவெனில்
மனிதர்களே
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 61-02-16 மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும் #1

59. நீங்கள், “நீர் எப்போதுமே நம்முடைய ஸ்திரீகளையும், நம்முடைய ஸ்திரீகளைக் குறித்துமே பேசிக்கொண்டிருக்கிறீர்” என்று கூறலாம்.

சரி, மனிதர்களே, அப்படியானால் ஒருவிசை உங்களை நான் நன்றாக அலசிப்பார்க்கிறேன்.

நான் உங்களிடம் ஒன்றைக் கூறட்டும்.

தன்னுடைய மனைவியை சிகரெட்டுகளைப் புகைக்கவும், குட்டை உடைகளை அணியவும் அனுமதிக்கும் எந்த மனிதனும் அவன் ஒரு மனிதனாய் இருந்தும் கூட

அவன் மேல் கொஞ்சம் மரியாதையே எனக்கு உள்ளது.

அவன் மிகவும் பெண் தன்மை கொண்டவனாயிருக்கிறான், அவன் எதைச் சேர்ந்தவன் என்பதும் கூட அவனுக்குத் தெரியவில்லை.

அவன் ஒரு மனிதனே அல்ல. அது சரியே. ஓ, அல்லேலூயா. அது சரியே.

அவன் ஒரு மனிதனுக்கு இழிவான சாக்குப்போக்காக இருக்கிறான்.

ஓ, அவன் ஒருவேளை ஆறடி உயரமுள்ளவானாகவும், 200 பவுண்டுகள் எடையுள்ளவனாகவும் இருக்கலாம், ஆனால் அது எனக்கு ஒரு மனிதனைப் போன்று காணப்படவில்லை.

உங்களுடைய வீட்டின் எல்லா இடங்களிலும் யார் முதலாளி (boss) என்பதை அது காண்பிக்கிறது.

அவள் கோபத்தோடு தன்னுடைய காலை தரையில் மிதித்து நடந்து வந்து, “நான் இப்பொழுதே உன்னிடம் கூறு கிறேன்” என்று (கூறும்போது), நீங்கள் ஒரு வியாதிப்பட்ட பூனைக்குட்டியைப் போன்று தலைவணங்கி விடுகிறீர்கள்.

என்ன காரியம்? நமக்குத் தேவை யானது... நமக்கு இன்றைய தேவை என்னவெனில் மனிதர்களே.

நமக்கு சுவிசேஷ பிரசங்கிமார்கள் தான் அவசியமாயுள்ளது.

பிரசங்க பீடத்தில் நின்றுகொண்டு, அந்தக் காரியங்களைக் குறித்து பேசாமல் தவிர்த்து விடும் எந்தப் பிரசங்கியாரும்

தான் தேவனால் அழைக்கப்பட்டிருந் தாலும் அவரிடம் சிறிதளவு மரியாதையே எனக்குள்ளது. சரி. பிரசங்க பீடத்தில் நின்று தேவனுடைய சத்தியத்தை கூற வெட்கப் படுகிற ஒரு மனிதன், ஒரு ஸ்திரீ தன்னுடைய மயிரைக் கத்தரிப்பது ஒரு ஒழுக்கக்கேடான காரியம் என்பதை அறியும் போது... வேதாகமம்... ஒரு மனி தனுடைய மனைவி தன்னுடைய மயிரைக் கத்தரிக்கும்போது, அவளை விட்டு விலகி, அவளை விவாகரத்து செய்ய அவனுக்கு உரிமை உண்டு. வேதாகமம் அவ்வாறு கூறுகிறது.

ஸ்திரீயினுடைய தலை யார்? அவ ளுடைய கணவன்.

வேதாகமம், “ஒரு ஸ்திரீ தன் மயிரைக் கத்தரித்துக் கொண்டால், அவள் தன்னு

டைய தலையைக் கனவீனப்படுத்துகிறாள்" என்று கூறுகிறது.

கனவீனமான எந்த ஸ்திரீயுடனும் வாழக்கூடாது. ஆமென்.

அவள் தன்னுடைய மகிமையை கத்தரித்துப் போடுகிறாள்.

சபையும் அதைத்தான் செய்கிறது.

அவள் அதே காரியத்தைச் செய்கிற போது, அவளுடைய மகிமையின் நதியை அவள் துண்டித்துப் போடுகிறாள்.

உம். ஓ, தேவனே, நான் இந்தக் காரியங்களை ஏன் கூறுகிறேன்? ஆனால் இது சத்தியமாயுள்ளது.

இல்லை, நமக்கு சமரசம் செய்கிறவர்கள் அவசியமில்லை. - நமக்குத் தேவையில்லை.

நீதிக்காகவும் உரிமைக்காகவும் நின்று அது என்னவாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் சத்தியத்தைக் கூறுகிற மனிதர்களும் ஸ்திரீகளுமே நமக்குத் தேவை. ஆமென்.

தேவனுடைய முத்திரை... என்னுடைய சகோதரனே, உன்னுடைய விளக்கின் திரியை வெட்டி சுத்தப்படுத்து.

பரிசுத்த ஆவியானவரின் வெளிச்ச மானது மீண்டும் புத்துணர்ச்சியோடு எரியட்டும்.

இது இருளடைந்து கொண்டிருக்கிறது.

ஓ, இது அப்படிப்பட்ட ஒரு பயங் கரமான நேரமாயுள்ளது.

இது இருளடைந்து கொண்டிருக்கிறது.



# தேவன் புருஷனை அவனுடைய மனைவிக்காக பதில் கூறச் செய்கிறார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 57-10-06 எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும் பாகம் #3

**புருஷன் தன் மனைவியின் மேல் ஆளுகை செய்பவனாயிருக்கிறான், அவன் தன்னுடைய மனைவிக்காக மட்டுமே பொறுப்புள்ளவனாயிருக்கிறான்.**

**தேவன் புருஷனை அவனுடைய மனைவிக்காக பதில் கூறச் செய்கிறார்.**




உன்
மனைவிக்காக
நீ தான் பதில்
கூறப்
போகிறாய்,
ஆனால்
உன்னுடைய
மனைவி
உனக்காக
பதில்
சொல்லப்
போவதில்லை
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 53-07-29 ஆதியாகமத்தின் மீதான கேள்விகளும் பதில்களும் COD #1

74. இப்பொழுது, இப்பொழுது, மனிதனும், ஸ்திரீயும், அதை நாம் காண்போம் என்று நம்புகிறேன். இப்பொழுது ஒரு ஸ்திரீ... இப்பொழுது இதை நீங்கள் காணும் விதத்தில் இதை நான் சரியாகக் கூறட்டும், பாருங்கள்.

ஸ்திரீ தன்னுடைய புருஷனுக்கு உட்பட்டவளாவாள்.

“ஒரு மனிதன் தன்னுடைய மனைவியை ஆளுகை செய்ய வேண்டும்” என்று வேதம் கூறுகின்றது.

ஆனால் அவர்கள் அதை எப்படி மாற்றிப்போட்டு விட்டார்கள்!

ஸ்திரீ மனிதன் மீது ஆளுகை செலுத்துகிறாள், “இப்பொழுது, ஜான் நீ வீட்டில் இரு நீ வெளியில் செல்லக்கூடாது!” “சரி என் அன்பே.” அதுதான் காரியம், பாருங்கள்?

75. திரு. அவர்களே, உன்னிடம் ஒன்றை நான் கூறட்டும்.

**உன் மனைவிக்காக நீ தான் பதில் கூறப்போகிறாய், ஆனால் உன்னுடைய மனைவி உனக்காக பதில் சொல்லப் போவதில்லை.**

நீ தான் ஸ்திரீக்குத் தலை, தேவன் மனிதனுக்குத் தலையாய் இருக்கிறார்.

ஆதலால் அவர், 'ஒரு மனிதன் கிறிஸ்துவுக்காக தன் மயிரைக் கத்தரிக்ககடவன். ஒரு ஸ்திரீ தன் மயிரை கத்தரிக்காதிருக்கக்கடவள். அவள் அவ்விதம் தன் மயிரைக் கத்தரித்தால், அவள் தன் புருஷனை அவமதிக்கிறாள்" என்று கூறினார். பாருங்கள்? வேதவாக்கியம் கூறுகிறபடி நான் என்ன கூற விழைகிறேன் என்று உங்களால் காணமுடிகின்றதா?





# உன் மனைவிக்கு புருஷனாக இராமலிருப்பது தவறென்று உனக்குத் தெரியுமா?

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 60-05-22M புத்திரசுவிகாரம் #3

76. ஸ்திரீகளே, ஆண்களின் சட்டையை (slacks) நீங்கள் உடுப்பது தவறென்று உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் கூந்தலைக் கத்தரிப்பது தவறென்று உங்களுக்குத் தெரியுமா?

மிஸ்டர், புகை பிடித்து நீ நடந்து கொண்டிருக்கும் விதத்தில் நடப்பது தவறென்று உனக்குத் தெரியுமா?

**உன் மனைவிக்கு புருஷனாக இராமலிருப்பது தவறென்று உனக்குத் தெரியுமா?**

**உன் மனைவிக்கு கோபம் வரும்போது, அவள் உன்னை உதைத்து வீட்டுக்கு வெளியே துரத்தி விட்ட பின்பு, "அன்பே, அது பரவாயில்லை. நான் உள்ளே வரட்டுமா?"**

**என்று நீ கேட்பது தவறென்று உனக்குத் தெரியுமா?...**

உன் குடும்பத்தின் மேல் உனக்கு ஆதிக்கம் செலுத்த முடியாமல் இருக்கும் போது, தேவனுடைய வீட்டின் காரியங் களை நீ எவ்வாறு கண்காணிக்க முடியும்? அது முற்றிலும் உண்மை.

**சகோதரியே, உன் புருஷன் உனக்குப் புருஷன் மாத்திரமல்ல, அவன் உன்னை ஆளுகை செய்பவன் என்று உனக்குத் தெரியுமா?**

தேவன் அவ்வாறு கூறியுள்ளார்.

ஏனெனில் புருஷன் வஞ்சிக்கப்பட வில்லை, ஸ்திரீயே வஞ்சிக்கப்பட்டாள்.

இருப்பினும், போதகர்களாகிய நீங்கள், தேவனுடைய வார்த்தை பெண் போதகர் களை நியமிப்பதில் எதிராயுள்ளது என்று

அறிந்த பின்பும், அவர்களை உங்கள் சபைகளில் தொடர்ந்து நியமித்து விடுகின் றீர்கள்.



## உங்களில் சில மனிதர்கள், கோழியின் மார்பெலும்பை உங்களை விட்டு நீக்கி விட்டு, உங்களில் உண்மையாகவே முதுகெலும்பை பெற்று, உங்களுடைய மனைவிகளை சரிப்படுத்துங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 56-10-04 ஓர் கலியாண விருந்து

43. **உங்களில் சில மனிதர்கள், கோழியின் மார்பெலும்பை உங்களை விட்டு நீக்கி விட்டு, உங்களில் உண்மையாகவே முதுகெலும்பை பெற்று, உங்களுடைய மனைவிகளை சரிப்படுத்துங்கள்.**

தெருவில் இறங்கி ஓடும் மகளுக்கு ஒரு அறை கொடு.

உங்களுடைய சிறு வயது மகள் தெருவில் ஓடி, ஏதோவொரு மனிதன் அவளிடம் தவறாக நடந்து கொண்டால், நீங்கள் திரும்பிச் சென்று, அம்மனிதனைக் கைது செய்யும்படி நீங்கள் விரும்புவீர்கள்.

நீங்கள் கண்டிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்.

சகோதரர்களே, நீங்கள் மனிதனாக இருக்கிறீர்கள். அது சரியே. நீங்கள் அப் படிப்பட்ட ஒருவராகத்தான் இருக்கிறீர்கள்.

***நீங்கள் வீட்டை ஆளுகை செய்பவர் களாக இருக்க வேண்டும்.***

**அந்தப் பெண் அவ்வாறு செய்ய அனுமதித்த காரணத்திற்காக தேவன் உங்களைப் பொறுப்பாளியாக்குவார்**: அவள் தன்னுடைய தலை மயிரெல்லாம் அலங்கோலமாகவும், ஒரு சிகரெட்டுட னும், தன்னுடைய முகமெல்லாம் சாயம் பூசினவளாயும் இரவில் வீட்டிற்கு வரு வதை நீங்கள் அனுமதிக்கும் காரணத்தால்.

எனக்கும் இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்று எனக்குத் தெரியாது.

**ஆனால், சகோதரனே, ஒரு காரியம் என்னவெனில், என்னுடைய ஜீவன் இருக்கும் வரை, துப்பாக்கி குழாயிலுள்ள நீண்ட மரக்கம்பு** (barrel slat) **அருகிலேயே வைக்கப்பட்டிருக்கும், நான் என்னுடைய கடமையைச் செய்வேன். ஆம், ஐயா. ஆம், ஐயா.** அவர்கள் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நான் நம்பு கிறேன்.

44. சகோதரனே, கென்டக்கியின் கல்வியறிவில்லாத நிலையைக் குறித்துப் பேசுகிறீர்கள்.

நீங்கள் அவர்களுடைய மேலான நிலைக்கு வருவதற்கு உங்களுக்கு அதிக காலம் ஆகும். அது சரியே.

பெண்களாகிய அவர்களில் ஒருவர் இவ்விதமாக வரட்டும், அந்த சிறிய வயதான தாயார் அந்தச்சிறிய பழமையான தொப்பியோடு (sunbonnet) எவ்விதம் நடந்து கொள்வாள் என்பதைக் கவனி யுங்கள்.

அவள், ‘சகோதரனே, ஒரு மரக் கிளையை இங்கே கொண்டு வாருங்கள்’ என்பாள்.

அவள் மூன்று அல்லது நான்கு நாட்கள் வீட்டை விட்டு வெளியே போகவே மாட்டாள் என்று கூறுகிறேன், ஏனெனில் அவளால் அது முடியாது. அது சரியே. அப்படியிருக்க நீங்கள், ‘அவள் பித்து பிடித்தவள்’ என்று சொல்லுகிறீர்கள்.



ஆகையால், ஒரு ஸ்திரீ ஒரு மனிதனைப் போன்று நடந்து கொள்ளவோ, ஒரு மனிதனைப் போன்று உடையுடுத்தவோ, ஒரு மனிதனைப் போன்று பேசவோ முயற்சிக்கும் போது, அவள் தன்னுடைய ஸ்தானத்துக்கு வெளியே இருக்கிறாள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 58-06-19B நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும்

தேவன் ஒருபோதும் ஸ்திரீயை மூல சிருஷ்டிப்பில் வைக்கவேயில்லை.

அவள் மனிதனுடைய ஒரு உபசிருஷ்டி யாக (by-product) இருக்கிறாள்.

மனிதனும் ஸ்திரீயும் ஒன்றே. ஒரு ஸ்திரீ, ஆதியிலே, அவர் ஆதாமிலிருந்து ஸ்திரீயை எடுத்தார்.

உண்மையில், மனிதனும் மனைவியும் ஒன்றே, ஆனால் அவர்களை மாம்சத்தில் வைக்க, அது மீண்டுமாக தங்களைத் தாங்களே பிரதி உற்பத்தி (reproduce) செய்தாக வேண்டியிருந்தது.

ஆனால் அவர் மனிதனுடைய பெண் தன்மை கொண்ட பாகத்தை எடுத்து, அதிலிருந்து ஒரு ஸ்திரீயை உண்டாக்கி னார்.

35. **ஆகையால், ஒரு ஸ்திரீ ஒரு மனிதனைப் போன்று நடந்து கொள்ளவோ, ஒரு மனிதனைப் போன்று உடையுடுத்தவோ, ஒரு மனிதனைப் போன்று பேசவோ முயற்சிக்கும் போது, அவள் தன்னுடைய ஸ்தானத்துக்கு வெளியே இருக்கிறாள்.**

ஒரு பெண் என்பவள் பெண்தன்மை கொண்டவளும் (feminish), இனிமையான வளும், அன்புள்ளவளுமாக இருக்கிறாள், அவள் ஒரு மனிதனைப் போன்று பெரியவளாகவோ, அவ்விதம் தொடர்ந்து போகவோ, அவனைப் போன்று நடந்து கொள்ளவோ மாட்டாள். நல்லது, அவள்

அவ்வாறு இருக்கும்படி எதிர்பார்க்கப் படவில்லை.

அவள் அவ்வாறு செய்யும்போது, அவ ளுடைய ஜீவியம் தாறுமாறான நிலையில் உள்ளது.

அவள் இனிமையானவளும், அன்புள் ளவளும், இரக்கமுள்ளவளுமாயிருக்கி றாள், அங்கே ஆதாமோ அதிகமாக ஆணுக்குரிய பெரிய உறுதியுள்ள வகை யினனாயிருக்கிறான், அவன் மனிதனாக இருந்தான், பெண்ணோ பெண்தன்மை கொண்டவளாயிருந்தாள், ஆனால் அது அதே ஆவியாகத்தான் இருக்கிறது, அவர் அவளை ஆதாமிடமிருந்து எடுத்தார்.

மேலும் கவனியுங்கள், ஒரு மனிதன் ஒரு மனைவியை ஏற்றுக்கொள்ளும் போது, அவன் இந்த மனைவியை தன்னுடைய மார்புக்குள் எடுத்துக்கொள்

கிறான் (நாம் இரு பாலரும் கலந்த கூட்டமாயிருக்கிறோம்.), அவன் இந்த பெண்ணை தன்னுடைய இனிய இருதய மாக தன் மார்புக்கு கட்டி அணைத்துக் கொள்கிறான், அப்போது அவள் அவன் மேல் தன்னுடைய முத்திரையை வைத்து விடுகிறாள்.

அங்கே வேறொரு பெண் அதை என்றென்றுமாக கெடுத்துப்போடுகிறாள். அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள்.

வேறு எந்தப் பெண்ணும் அந்த அச்சை எந்தவித்திலும் பொருத்தக் கூடாது.

உங்கள் கரங்களை ஒரு பெண்ணைச் சுற்றிலும் போட்டுக் கொள்ள, உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. அது சரியே. உங்களுக்கு ஒரு மனைவி இருக்கிறாள், நீங்கள் அவளையே உங்கள் மார்போடு இழுத்துக்கொள்ளுங்கள், தேவன் அவளை

உங்கள் இருதயத்தில் வைத்து, உங்களை அவள் மேல் முத்திரை போட்டு விட்டார், அவள் உன்னுடையவளாக இருக்கிறாள். நீ அவளுக்கு சொந்தமானவனாக இருக்கி றாய்.

36. பெண்ணே, நீ வேறொரு மனி தனை உன்னுடைய கரத்தில் எடுத்துக் கொண்டால், நீ எடுக்கப்பட்டிருந்த அந்த அச்சை (வார்ப்புருவை) நீ சிதைத்துப் போட்டிருக்கிறாய். அது ஞாபகம் இருக் கட்டும்.

நீ ஒரு மனிதனைப்போல நடந்து கொள்ளும்போது, நீ உன்னுடைய ஸ்தானத்திற்கு வெளியே இருக்கிறாய்.

மனிதனும் கூட பெண் தன்மை கொண் டவனாவதற்குத் துவங்கும் போதும், சிறு பிள்ளைத்தனமாக நடக்கத் துவங்கும் போதும், மேலும் இதையும், அதையும்,

மற்றதையும் செய்யத் துவங்கும் போதும், அவன் தன்னுடைய ஸ்தானத்திற்கு வெளியே இருக்கிறான்.

அவன் முதலாளியாக இருக்கிறான்; அவன் ஆளுகை செய்பவனாக இருக்கிறான். இல்லை .... இப்பொழுது, ஒரு மிதியடியாக (floor mat) இருப்பதாக நான் அர்த்தங்கொள்ளவில்லை; ஆளுகை செய்யும் ஒருவன் என்று நான் சற்று முன்பு கூறினேன், துணையாக இருப்பதையே (helpmate) அர்த்தப்படுத்துகிறேன். பெண்களை திரும்பத்திரும்ப காலால் உதைக்க அல்ல, அவர்கள்... அல்ல.

ஆனால் வேதாகமம் கூறுகிறது.... தேவன் சிருஷ்டிப்பில், "நீ (அவன்) உன்னை ஆண்டுகொள்ளுவான்" என்று கூறியுள்ளார்.

ஒரு முதலாளியாக இருப்பது அல்ல, ஆனால் ஒரு துணையாக, உங்களின் ஒரு பாகமாக இருப்பதற்குத் தான்.

அவள் இனிமையாகவும், அன்பானவளாகவும், மென்மையாகவும் இருக்கிறாள்; நீங்கள் அவளைச் சுற்றிலும் இனிமையாக வழிநடத்த வேண்டும், ஏனென்றால் அவள் உங்களின் ஒரு பாகமாக இருக்கிறாள்.

நீங்கள் அவளைத் தவறாக நடத்தும்படிக்குப் போவீர்களானால், நீங்கள் உங்களைத்தானே தவறாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

மனரீதியாக சரியாயிருக்கும் ஒரு மனிதன் அவ்வாறு செய்ய மாட்டான். சரி.



அந்த மனிதனுக்கு அவனுடைய சொந்த வீட்டாரின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போனால், அவன் எவ்விதம் அதை தேவனுடைய வீட்டில் செய்ய முடியும்?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

35. இங்கு ஒரு கேள்வி உள்ளது. அதற்கு இப்பொழுதே பதில் சொல்லி விடுகிறேன். அது இங்குள்ளது. அதை இன்று காலையில் அல்லது வேறு எப் பொழுதோ கண்டேன். "நீங்கள் எப்பொ ழுதுமே ஸ்திரீகளைக் குறித்து, அவர்கள் எவ்விதம் தங்கள் தலைமயிரை அலங் கரித்துக் கொள்ளக் கூடாது என்று சொல் லிக் கொண்டேயிருக்கிறீர்கள், ஆனால் ஆண்களைக் குறித்து நீங்கள் ஒன்றுமே சொல்வதில்லை" என்று அக்கேள்வியில் எழுதப்பட்டுள்ளது.

36. ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயைப் போல் நீண்ட தலைமயிர் தன் முதுகில் தொங்கிக் கொண்டு இங்கு வருகிறதை

நான் கண்டால், நான், “மிஸ்டர், நீர் ஏன் அம்பட்டன் கடைக்குச் செல்லக் கூடாது? நீர் ஒரு பெண்ணைப் போல் காட்சி யளிக்கிறீர்" என்பேன். பாருங்கள்? ஆனால் மனிதர் சாதாரணமாக அவ்விதம் செய்வதில்லை. பாருங்கள்? மனிதர். மனிதர் பிழையற்றவர் என்று நான் கூற வரவில்லை, அவர்கள் ஸ்திரீகளைப் போலவே குற்றமுள்ளவர்கள்.

இதைக் கூற முற்படுகிறேன். **அவ்விதம் செய்யத் தன் மனைவியை அனுமதிக்கும் ஒரு மனிதன் இரட்டிப்பாக குற்றமுள்ள வனாயிருக்கிறான். ஏனெனில் வீட்டார் அவன் சொற்படி தான் நடக்க வேண்டும். அந்த மனிதனுக்கு அவனுடைய சொந்த வீட்டாரின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போனால், அவன் எவ்விதம் அதை தேவனுடைய வீட்டில் செய்ய முடியும்? பாருங்கள்?**

37. இங்கு வருகை தருகின்ற நமது ஸ்திரீகளின் கூட்டத்தைக் குறித்து நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இதை நான் மரியாதையோடும் அன்போ டும் கூறுகிறேன். இது உண்மையென்று தேவன் அறிவார். தென் பகுதியில் எனக்கு ஒரு போதகர் நண்பர் இருந்தார். நான் அதுவரை கண்டிராத அவ்வளவு சுத்த மாகக் காணப்படும் சபைகளில் ஒன்றை அவர் கொண்டிருந்தார். ஸ்திரீகளைக் குறித்து பேசுகையில், மிகவும் அழகான பெண்கள் அங்கு வந்து பரிசுத்தமுள்ள வர்களாய், தேவபக்தியுள்ளவர்களாய், நீண்ட தலைமயிரை உடையவர்களாய் உட்காருவார்கள். அந்த சபைக்கு சென்று அவர்களைக் கண்டு பேரானந்தமடைய நான் விரும்பினதுண்டு. ஆனால் இன்றைக்கு அவர்களையும் மங்கச் செய் யும் ஸ்திரீகளைக் கொண்ட ஒரு சபையை

கர்த்தராகிய இயேசு எனக்கு அருளி யிருக்கிறார்.

38. நான் நீசத்தனமாக இருக்க வேண்டும் என்பதற்காக உங்களைக் கடிந்து கொள்வதில்லை. உங்களைக் குறித்து நான் புளாங்கிதம் அடைகிறேன். சாத்தான் எங்காவது காலடி எடுத்து வைக்க எனக்கு பிரியமில்லை. நீங்கள் மேல் நோக்கிச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன், பின் நோக்கி அல்ல. எந்த ஒரு மனிதனும் நயமான சொற்களினால் உங்களை வஞ் சிக்க இடம் கொடாதீர்கள். “ஓ, நல்லது. அதுவல்ல...” என்று யாராகிலும் கூற அனுமதிக்காதீர்கள். பாருங்கள்? அப்படித் தான் சாத்தான் ஏவாளுக்கு வார்த்தையை வியாக்கியானித்துக் கொடுத்தான் பாருங் கள்? வார்த்தை என்ன உரைக்கிறதோ, அதை அப்படியே விசுவாசியுங்கள். சரி.



# அவர்கள் மனிதர்களைப் போல் தைரியமாகப் பேசி, தங்கள் குடும்பத்தை நடத்தினர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-01-20E இன்னும் ஒரு விசை கர்த்தாவே

அந்த பழமை நாகரீகமுள்ள ஜெபக் கூட்டத்தை மறுபடியும் நடத்து.

பழமை நாகரீகமுள்ள மனந்திரும்பு தலில், அவர்கள் மரித்து பாவத்துடன் எவ்வித தொடர்பும் இல்லாத நிலை அடையும் வரைக்கும் பீடத்தண்டையில் தங்கியிருந்தனர்.

ஒரு ஸ்திரீ பீடத்தண்டை சென்று பாவத்துக்கு மரித்துவிட்டு, அடுத்த நாள் தலை மயிரைக் கத்தரித்துக்கொண்டு, முகத் தில் வர்ணம் தீட்டிக்கொண்டு வருவதை நீங்கள் காண முடியாது, அப்படி ஒன்று இருந்ததே கிடையாது.

பரிசுத்த ஆவி போதிக்கிறது - பரிசுத்த ஆவியின் தன்மை அப்படி செய்கிறது.

பெண்கள் வெளியே பாலுணர்ச்சி தூண்டும் உடைகள் உடுத்தி, உள்ளே வரும் போது தங்களை மூடிக்கொள்வதை நீங்கள் காண்பதில்லை.

ஒரு மனிதன் தன் கருத்துக்கு உறுதியாக நிற்க பயப்படுவதையோ, அல்லது ஒரு செயலைத் தைரியமாகப் புரிந்த காரணத் தால், தன் மனைவி அவளை விட்டுப் போய் விடுவாளோ என்று பயப்படு வதையோ நீங்கள் காண முடியாது.

மனிதர் ஆண்மைத்தனம் கொண்டவர் களாகவே அந்நாட்களில் இருந்தனர்.

அவர்கள் மனிதர்களைப் போல் தைரியமாகப் பேசி, தங்கள் குடும்பத்தை நடத்தினர்.

அவர்களே குடும்பத்தின் தலைவராக இருந்தனர்.

ஆனால் இந்த வினோதமான அமெரிக்கர்கள்....




நீங்கள் எவ்வளவு தான் நடனமாடி, அந்நிய பாஷை பேசினாலும் எனக்குக் கவலையில்லை. நீங்கள் உங்கள் கணவருக்கு கீழ்படியவில்லை என்றால், தேவனுடைய சித்தத்துக்கு புறம்பாகத்தான் இருக்கிறீர்கள்.

I don't care how much you dance and speak with tongues, if you don't obey your husband, you're out of the will of God.

உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜூன் 30, 1963, பத்தி எண் 80

# நமக்கு இன்றைய தேவை என்னவெனில் மனிதர்களே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து